(ஆ) அண்ணா பத்திரிகை மீது.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 246-ன் கீழ் அடியிற்கண்ட உரிமைப் பிரச்சினையை (Breach of Privilege) இந்தச் சட்டப் பேரவைமுன் கொண்டுவர தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

சட்டப் பேரவையில் 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 28-ம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் கிடைக்காமல் அவதியுறுவது அரசுக்குத் தெரியுமா? என்ற குறுகிய கால வினாவை எழுப்பினார். அதையொட்டி சட்டப் பேரவை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் நோட்டுப் புத்தகங்களை தயாரிக்கும் பணியை தனியார் கம்பெனிக்கு கொடுத்து உள்ளீர்கள். அவர்களால் குறிப்பிட்டபடி தயாரிக்க இயலவில்லை. இருந்தும் தனியார் கம்பெனிகளிடம் நோட்டுப் புத்தகங்களை தயாரிப்பதை ஏன் தர வேண்டும் என்று கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்விக்கு கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் பதில் உரைத்தார். அவருடைய பதிலில் மாணவர்களுக்கு மலிவு விலையில் அளிக்கப்பட்ட காகிதத்தை முன்பு இருந்த தி.மு.க. வினர் முறை கேடாக விற்று விட்டனர் என்று, தி.மு.க. ஆட்சியின் மீது குறிப்பிட்டு ஆதாரங்களோடு எந்தவித குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. அது தெளிவாக குறிப்பேட்டிலும் இருக்கிறது.

ஆனால் அதற்கு மாறாக 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 28-ம் நாளன்று வெளியான அண்ணா பத்திரிகையில் மத்திய அரசு மலிவான விலையில் தந்த நோட்டு புத்தக காகிதம்—முறைகேடான விற்பனை—என்று கொட்டை எழுத்துக்களில் போட்டுவிட்டு உள்ளே ' தி.மு.க. வினர் மீது அமைச்சர் அரங்கநாயகம் குற்றச்சாட்டு என்று தலைப்பிட்டு மாணவர்களுக்கு மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்களை தயாரித்து அளிக்க மத்திய அரசால் மலிவு விலையில் அளிக்கப்பட்ட காகிதத்தை முன்பு இருந்த தி.மு.க. வினர் விற்றுவிட்டதாக அபாண்டமாக கல்வி அமைச்சர் சொல்லாததை, சட்டசபையில் அவர்கள் எடுத்துச் சொல்லாததை இப்படி அவர்கள் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். முன்பு இருந்த தி.மு.க. அரசின் மீது அமைச்சர் அரங்கநாயகம் அண்ணா பத்திரிகையில் மேற்கூறியவாறு செய்தி வெளியிட்டதைப் போல சட்டப் பேரவையில் தனது பதில் உரையில் குற்றச்சாட்டு எதுவும் சொல்லாமல் இருக்கும் நிலையில் அண்ணா பத்திரிக்கை வேண்டுமென்றே உள் நோக்கத்தோடு முன்பிருந்த தி.மு.க. ஆட்சிக்கும், தி.மு.க. வினருக்கும் மக்கள் மத்தியில் களங்கம் ஏற்படுத்தும் விதத்திலும் தவறான எண்ணம் ஏற்படும் விதத்திலும் உண்மைக்குப் புறம்

பான செய்தியை பிரசுரம் செய்திருக்கிறது. இது அவையின் உரிமையை மீறிய செயலாகும். இதில் உரிமை மீறல் மிகத் தெளிவாக இருக்கிறது. எனவே, ஊழலைப் போக்குவதற்காகவே பிறப்பெடுத்திருப்பதாக சொல்லும் அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பிரச்சினை குறித்து பத்திரிகை ஆசிரியர் அளித்துள்ள விளக்கத்தில் "திரு. செ. அரங்கநாயகம் சட்டப் பேரவையில் அளித்த பதிலில் முன்பு இருந்தவர்கள் எனக் கூறியதை அடுத்து, முன்பிருந்த ஆட்சியாளர்கள் என கருத்தில் கொண்டு, தி.மு.க. வினர் என்று தலைப்பில் மட்டும் தவறாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தவறாக வெளியிட்டமைக்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம், இனியும் இத்தகைய தவறு நேராது எனத் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பிட்ட செய்திக்கான திருத்தமும் 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8-ம் நாள் அண்ணா நாளிதழில் வெளியிடப் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் " என்று எழுதியிருக்கிறார்கள்.

ஆகவே இதில் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : வருத்தம் தெரிவித்திருப்பதற்காக நன்றி.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

காவேரியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், அ. ரகுமான்கான், சே. எம். தங்கமணி, செ. இராமலிங்கம், இ. எஸ். எம். பக்கீர் முகமது, இ. முத்துராமலிங்கம், பொ. விஜயராகவன் நா. சுந்தரராஜ், சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், ஆர். கருப்பையா, ரா. கிருஷ்ணன், எம். செல்லமுத்து ஆகியோர் "காவேரியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கும், அதனால், விளைந்துள்ள பாதிப்புக்களும் குறித்து" ஒத்திவைப்பு தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களுள் கட்சிக்கு ஒருவர் மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.